# பத்துப்பாட்டில் நிலம் சார்ந்த செய்திகள்

**இரா. மாரிமுத்து**
முனைவர்பட்ட ஆய்வாளர்
கஸ்தூரிபா காந்திகன்யா குருகுலம், வேதாரண்யம்

**மலர்:** 3
**இதழ்:** 4
**மாதம்:** ஏப்ரல்
**வருடம்:** 2019
ISSN: 2454-3993

## முன்னுரை

உலக இயக்கமானது நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களைக் கொண்டு நிகழ்கின்றது. இவற்றில் நிலம் உயிரின் வாழ்வுக்கும் வழமைக்கும் முதன்மையான பங்காற்றுகின்றது. நிலத்தினைப் பண்டைய அறிஞர்கள் ஐந்து கூறுகளாக அளவீடு செய்தனர். இத்தகைய நிலங்களை, அதன் தன்மைக்கேற்ப குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப் பாகுப்படுத்தினர். இதுபோன்ற நிலவியல் செயல்பாடுகளைப் பண்டைய இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. அவற்றில், பத்துப்பாட்டு நூல்களில் நிலவியலும் திணைக்கோட்பாடும், நீர்நிலைகளும் நிலவளமையும், உற்பத்திப் பொருளும் வணிகச்சந்தையும் போன்ற பொருண்மையின் கீழ் ஆராய்வதைக் களமாகக்கொண்டு இக்கட்டுரை அமைகின்றது.

## நிலவியலும் திணைக்கோட்பாடும்

நிலம் என்பது ஒரேமாதிரியான தன்மையது இல்லை. ஒவ்வொரு இடத்தின் தன்மைக்கேற்ப மாறுபடும் நிலையினதாகும். இவ்வாறு அமையப்பெறும் இயற்கை நிலவியல் அடிப்படை, மனிதனின் உடற்செயல்பாட்டினால் சரிசெய்யப்பட்டது. வாழ்வியலோடு நிலங்கள் ஒன்றாக வைத்துப் போற்றப்பட்டன. திணையின் கோட்பாட்டோடு அளவீடு செய்யப்பட்ட பிறகு, முப்பிரிவுகளுக்கு உட்படுத்தினர். இம்முறையானது பண்டைத்தமிழரின் நிலவியல்சார் சமூகவியலை உணர்த்துவதாக அமைகின்றது.

முதற்பொருள் நிலத்தின் தன்மையும் பருவநிலைகளையும் உள்ளடக்கியது கருப்பொருள் அந்தந்த நிலத்திற்கும் பருவத்திற்கும் தக்க அமைவது. உரிப்பொருள் முதற் பொருளையும், கருப்பொருளையும் சார்ந்தே அமைவது. குறிஞ்சிக்குப் புணர்ந்தலும், முல்லைக்கு இருத்தலும், மருதத்திற்கு ஊடலும் இரங்கலும், பாலைக்கு பிரிதலும் என உரிப்பொருள்கள் மக்களின் அக வாழ்வோடு அளவீடு செய்யப்பட்டன,

**“புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் அவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங் காலைத் திணைக்குரியபொருளே”**

**(தொல்காப்பியம். அகத்திணை. 16)**

எனத் தொல்காப்பியர் கூறுகிறார். இவர்காலத்திற்கு முன்னரே இம் முப்பொருள் அளவீடு தமிழகத்தில் இருந்தமையை அறியமுடிகிறது.

மக்களின் நாகரிகம் தோன்றுவதற்குச் சூழ்நிலைகளே அடிப்படையாக இருந்துள்ளன. இதனைப், "புவியியல் கொள்கை, மண்வள இழப்புக் கொள்கை, நாடோடிக் கொள்கை, துன்பியல் கொள்கை" என்று க.பஅறவாணன் கூறுகின்றார் (தமிழர் இலக்கியச் சமூகத்தளங்கள், ப.4).

பண்டைத்தமிழர் ஐந்திணைப் பகுப்பை இடவியில் கொள்கை அடிப்படையிலும், நிலவியல் முறை அடிப்படையிலும் வைத்தே போற்றினர். பத்துப்பாட்டில் இடம் பெற்றுள்ளன நூல்களை ஆராயும்போது, அவை அனைத்தும் நிலவியல் கூறுகளை உள்ளடக்கி இருப்பதை அறியமுடிகின்றது. அவற்றில், ஆற்றுப்படை நூல்களில் ஐந்திணைகளின் வருணனைக் கொண்டே எழுதப்பட்டிருப்பதைக் காணமுடிகின்றது. குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை ஆற்றிருத்தல் அதாவது முல்லைக்குரிய செயல்பாடு, பட்டினப்பாலை பிரிதல் அதாவது பாலைக்குரிய செயல்பாடு, பட்டினப்பாலை பிரிதல் அதாவது பாலைக்குரிய செயல்பாடு, மதுரைக்காஞ்சி நிலையாமை அதாவது, காஞ்சித் திணையும் கொண்டு இருப்பதை அறியமுடிகிறது. எனவே இவை அனைத்தும் நிலவியலை அடிப்படையாகக்கொண்டே எழுதப்பட்டிருப்பதை தெரிந்து கொள்ளமுடிகிறது.

நிலமானது, அதன் தன்மைக்கேற்ப அளவீடு செய்யப்பெற்று, அந்தநிலத்தினைச் சார்ந்து பல்வேறு மக்கள் வாழ்ந்தனர் என்பதை, மருதசான்றை (மதுரைக்.270), முல்லைசான்ற (285), குறிஞ்சிசான்ற (300), பாலைசான்ற (314), நெய்தல் சான்ற (325) என் பாடல் அடிகளைக் கொண்டு அறியலாம். இவ்வடிகளின் ஆசிரியர்மாங்குடி மருதனார் நிலவியல் சார்பான கொள்கையுடையவராக இருந்ததை அறியமுடிகிறது.

**நீர்நிலையும் நிலவளமையும்**

பண்டைக்காலத்தில் நீர்நிலைகள் மிகுதியாக இருந்தன அவை மக்கள் வாழ்வில் முக்கியப் பங்காற்றின. இதன் பயன்பாடு கருதியே நீர்நிலைகளை மக்களே ஏற்படுத்தவும் செய்தனர். நீரின் பயன்பாட்டைக் கருத்தில் கொண்டே வள்ளுவனார்

> **"நீர்இன்று அமையாது உலகுஎனின் யார்யார்க்கும்**
> **வான்இன்று அமையாது ஒழுக்கு"** **(குறள்.20)**

எனக் கூறியுள்ளார்.

நீரைக்கொண்டுவேளாண் தொழிழ் செய்வதில் பழந்தமிழர்கள் ஈடுப்பட்டிருந்தனர். அதன்பொருட்டு நிலங்களை உழவுக்கு உட்படுத்தினர். உழவுக்கேற்ற நிலங்களுக்கு நீர்ஆதாரம் போதிய அளவு கிடைத்தது. அதனை விரிவுபடுத்தவும் செய்தனர்.

"அகழ்" என்பதற்குக் குளம் அகழப்படுத்தல் என்று நச்சினார்க்கினியர் உரை கூறியுள்ளார். இதனைப் போன்றே கோட்டையைச் சுற்றிலும் நீர்நிலைகள் இருந்தன. இதனையும் "அகழ்" (மலைபடுகாடம்.24) என்றே கூறப்பட்டது. இதற்க்குக் "கிடங்கு" (மதுரைக்.64) எனவும் பெயருண்டு. நீர்நிறைந்தபள்ளம் "இலஞ்சி" (மதுரைக்.248) எனக் கூறப்பட்டுள்ளது. இதனை "மடு" என நச்சினார்க்கினியார் கூறுகின்றார். ஆற்றில் ஆழமுள்ள இடம் "மடு" (மலை படு.228) எனப்படும்.

இந்நீர் நிலைகளேயன்றி, நிலவியல் அளவீடுகளில் உப்பங்கழியின் உற்பத்தி நிலையும் ஒன்றாகும். கடலை அடுத்து உப்பு எடுக்கும் நீர்ப்பரப்பு இதற்கு ஏற்ற இடமாகும். உப்பு வணிகமும் நிலவளமைக்குச்

சிறப்பு சேர்ப்பதாக அமைந்தது. இக்கழிகளைச் சுற்றிப் பல ஊர்களும் இருந்தன. நீர்நிலைகளை மக்களும் முயன்று ஏற்படுத்தினார். இதற்குச் சான்றாகக் "கேணி" (சிறப்பாகும் 172) என்ற சொல்லை நல்லூர் நத்தத்தனார் பயன்படுத்திருப்பதைக் குறிப்பிடலாம். இவை மட்டுமின்றி பண்டையகால நீர்நிலைகளில் சுனை, பொய்கை, ஆறு, வையையாறு, சேயாறு, காட்டாறு போன்றவை அடங்கும்.

நீர்நிலைகளை மக்களின் தேவைக்கேற்ப ஏற்படுத்துவதை அக்கால மன்னர்களும் விரும்பினர். அதன் மூலம் வேளாண் வளம் பெருகியது. இதனை,

**காடு கொன்று நாடாக்கிக்**
**குளந்தொட்டு வளம் பெருக்கி"** **(பட்டினப்பாலை 283-284)**

என்ற பாடல் அடிகள் கொண்டு அறியமுடிகின்றது. நீர்நிலைகளை ஏற்படுத்துவ தன் மூலமே நிலவளமை அடையமுடியும் நிலவியல் சார்சமூகவியலராகப் பண்டைத் தமிழர் இருந்தனர்.

**உற்பத்தி பொருளும் வணிகச்சந்தையும்**

நீர் ஆதாரம் மிகுந்து காணப்பட்ட பண்டைத் தமிழகத்தில் வேளாண் தொழில் மூலமே மிகுதியான உற்பத்தி இருந்தது. இதன் விளைவாக வெளிநாட்டவரும் இங்கு வந்து வணிகம் செய்யத்தலைப்பட்டனர். பெரும்பாலும் வேளாண் பொருள் உற்பத்தியில் நெல்லும், கரும்பும் சிறப்பிடம் பெற்றன. இவை இரண்டும் மருதநிலப் பயிர்கள், குறிஞ்சி, முல்லை ஆகிய நிலங்களில் மூங்கிலரிசி, தினையரிசி, வரகரிசி, அவரை போன்றன பயிர் செய்யப்பட்டன. இவை மட்டுமின்றி வெளிநாட்டவர் தமிழகம் புகுவதற்குக் காரணமான பருத்தி, மிளகு, சந்தனம் போன்ற வாசனைப் பொருள்களும் அதிகமாக விளைந்தன. இச்செய்திகளைச் சங்க இலக்கியங்கள் சான்றளிக்கின்றன.

ஊர்களைச்சுற்றி வேளாண் நிலங்கள் இருந்தன (புறம்.387). அந்நிலங்களில் பயிர் செய்யப்பட்டுவந்தன. ஒருவேலி நிலத்தில் ஆயிரம் கலம் நெல் விளைந்தது. இதனை

**சாலிநெல்லின் சிறைகொள் வேலி**
**யாயிரம் விலையுட் டாக** **(பொருநர்ஆற்றுப்படை.246-247)**

என்ற பாடல் அடிகள் பதிவுசெய்கின்றன.

உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள், அவரவர் தேவையைக் கருத்தில்கொண்டு பண்டமாற்று முறையில் வேற்று நிலத்து மக்களுடன் மாற்றிக்கொண்டனர். உதாரணமாக,

**"நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளா**
**ஏளேருமை நல்லான்கருநாகு பொறுஉ**
**மடிவாய்க் கோவலர்"** **(பெரும்பா 164-166)**

என்ற பாடல் அடிகளைக் குறிப்பிடலாம். இதில் இடையர்கள் நெய்யினை விற்பனை செய்யும்போது, அதற்க்கு ஈடாகப் பொன்னைப் பெறாது, எருமை மாட்டினைப் பெற்று வருவர் என்று கூறப்பட்டுள்ளது. பண்டைக்காலச் சந்தைப்படுத்துதல் பண்டமாற்று முறையிலே நிகழ்ந்ததை அறிய முடிகிறது.

"வணிகம் செழிப்புடன் வளர ஒரு இடத்தில் உற்பத்தியாகும் பொருளை மற்றொரு இடத்திற்கு கொண்டு சென்று விற்பனை செய்ய சாலைவசதிகள் தேவை. சாலை வசதியிருந்தால்தான் போக்குவரத்து எளிதில் நடைபெறும், போக்குவரத்திற்குத் தகுதியான சாலைகள் அமைய வழிகோலியவர்கள் வேட்டையாடுதலில் ஈடுபட்டிருந்த கற்காலமக்களேயாவார். அவர்கள் வேட்டைக்குச் செல்லும்பொழுது சிறிய பாதைகள் தோன்றின.

கால்நடைகளை மேய்ச்சல் நிலம் தேடி ஓட்டிச் செல்லும்பொழுது. இச்சிறுபாதைகள் பெரிய வழிகளாயின” என்று நடன. காசிநாதன் கூறியுள்ளார் (தமிழர் நாகரிகம், ப.197).

வணிகத்தின் மூலம் வளமையடைந்த தமிழகத்தில் வெளிநாட்டுப் பொருள்கள் பல்லாற்றானும் வந்துகுவிந்தன. பலபண்டங்கள் கடல்வழிப் போக்குவரத்தில் இறங்கியத்தைப் பட்டினப்பாலை சிறப்பித்துக் கூறுகின்றது. பொருள்களில் தமிழகத்திற்கு குதிரைகளும் வந்திறங்கின. இதனை,

**“நீரின் வந்தநிமிர்பரிப் புரவியுங்”** **(பட்டினப்பாலை .185)**

என்ற பாடல் அடி குறித்துள்ளது.

தமிழகத்தில் நடைப்பெற்ற வணிக முறையில் உற்பத்திப் பொருள்கள் சில உற்பத்தியான இடங்களிலேயே விற்பனை செய்யப்பட்டன. இவ்வாறு செய்யப்பட்ட பொருள்களுள் “உப்பு“ சிறப்பிடம் பெறுகின்றது. உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் அரசாங்க முத்திரையுடன், வரி செலுத்தப்பட்டு பின்னரே சந்தைப்படுத்தப்பட்டன என்பதைப் பத்துப்பாட்டு இலக்கியங்கள் பதிவுசெய்கின்றன.

### முடிவுரை

பழங்காலந்தொட்டே நிலவியல் சார்ந்த அளவீடுகள் மக்களின் வாழ்வோடு இணைந்திருந்ததை அறியமுடிகிறது. இவ்வாறான அளவீடுகள் திணைக் கோட்பாட்டின் அடிப்படையிலும், நீர்நிலைகளின் அடிப்படையிலும், நிலவளமை மற்றும் உற்பத்திப் பொருளைச் சந்தைப்படுத்தும் நிலைபோன்ற கூறுகளினால் நிலவியல் சார்சமூகவியலைப் பழந்தமிழர் போற்றி வந்த நிலையினை உய்த்துணர முடிகின்றது.

### குறிப்புகள்

1. தொல்காப்பியம் .அகத்திணை. 16.
2. குறள். 20.
3. பட்டினப்பாலை. 283-284.
4. பொருநர்ஆற்றுப்படை. 246-247.
5. பெரும்பாணாற்றுப்படை. 164-166.
6. பட்டினப்பாலை. 185.